மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 311/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அசோக்சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : அரியநாயகம் (பி.வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

09.10.2025

**முதல் விசாரணை –**

இவ்வழக்கின் 5ம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதை படித்து பார்த்துதான் கையொப்பம்.

1. 27.08.1920ம் தேதியிட்ட வாதிகளின் தந்தை பெயரில் உள்ள கிரையப்பத்திரம் SRO நகல் **பிவாசாஆ 1** ஆகும்.

2. 04.02.1993ம் தேதியிட்ட விருதுநகர் துணை ஆய்வாளர் சர்வே உத்தியோகஸ்தர் வழங்கிய சர்வே நோட்டீஸ் பதிவுகளை மாற்றம் செய்வதற்கான அறிவிப்பு அசல் **பிவாசாஆ 2** ஆகும்.

3. 18.12.2019ம் தேதியிட்ட 5ம் பிரதிவாதிக்கு மற்ற பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த இனாம்செட்டில்மெண்ட் பத்திரம் கணினி நகல் **பிவாசாஆ 3** ஆகும்.

4. 06.02.2020ம் தேதியிட்ட ஆரியநாதபண்டாரம் மகன் மாரிமுத்து பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய திருச்சுழி வருவாய் வட்டாட்சியர் உத்தரவிட்ட உத்தரவு அசல் **பிவாசாஆ 4** ஆகும்.

5. 11.02.2020ம் தேதியிட்ட நத்தம் நிலவரித்திட்ட துாய சிட்டா அசல் **பிவாசாஆ 5** ஆகும்.

6. 02.02.2021ம் தேதியிட்டட 5ம் பிரதிவாதி கொடுத்த மனுவிற்கு வாதிக்கு வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து வந்த விசாரணை அழைப்பாணை அசல் **பிவாசாஆ 6** ஆகும்.

7. 23.03.2021ம் தேதியிட்ட விருதுநகர் மாவட்ட பதிவாளர் அவர்கள் விசாரணை அழைப்பாணை அசல் **பிவாசாஆ 7** ஆகும்.

8. 25.04.2024ம் தேதியிட்ட 5ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது கணினி நகல் **பிவாசாஆ 8** ஆகும்.

9. 20.06.2024ம் தேதியிட்ட சொத்தைப் பொறுத்து யாதொரு வில்லங்கமும் இல்லை என்பதற்கான சான்று கணினி நகல் **பிவாசாஆ 9** ஆகும்.

10. 5ம் பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **பிவாசாஆ 10.** ஆகும்.

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).